# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 13.03.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இரண்டு மூன்று நாட்களுக்கு முன் ரபியுல் அவ்வல் மாதம் 12 ஆம் தேதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் வந்தது. முஸ்லிம்களின் ஒரு பகுதியினர் இந்த நாளை மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர். பாகிஸ்தானில் இந்த நாளை குறிப்பாக கொண்டாடுகின்றனர். நம்மை எதிர்க்கின்ற சிலர், அஹ்மதிகள் ஏன் இந்த நாளை கொண்டாடுவதில்லை என கேட்கின்றனர். இது தொடர்பாக இன்று நான் சில விஷயங்களைக் கூறுகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக என்ன கூறியுள்ளார்கள் என்பதையும் எடுத்துரைப்பேன். உண்மையில் அஹ்மதிகள்தான் இந்த நாளை மதிக்கத் தெரிந்தவர்கள் என்பது உங்களுக்கு இதன் மூலம் புரிந்து விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கூற்றை எடுத்துரைக்கும் முன் '**மீலாதுந்நபி**' தினத்தைக் கொண்டாடும் பழக்கம் எப்போதிருந்து உருவானது? இதன் வரலாறு என்ன என்பது பற்றி கூறுகிறேன். முஸ்லிம்களில் கூட சில பிரிவுகள் '**மீலாதுந்நபி**' தினத்தை கொண்டாடுவதில்லை.

இஸ்லாத்தின் முதல் மூன்று நூற்றாண்டு மிகவும் தலைசிறந்த நூற்றாண்டாக கருதப்படுகிறது. அந்த நூற்றாண்டில் வாழ்ந்த மக்களிடம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது காணப்பட்ட அன்பு, நேசம் மிகவும் உயர் தரமானதாக இருந்தது. அவர்கள் அனைவரும் சுன்னத்தை நன்கு அறிந்தவர்களாக இருந்தனர். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஷரீஅத்தையும், சுன்னத்தையும் பின்பற்ற வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தனர். அவ்வாறு இருந்தபோதிலும் சஹாபா மற்றும் சஹாபியாக்களை நேரில் கண்டவர்களான தாபியீன்களில் ஒருவர் கூட மீலாதுந்நபி பெருநாளை கொண்டாடியதாக வரலாற்றில் எங்கும் நம்மால் காண முடியாது.

இந்த நாளை கொண்டாட வேண்டும் என்ற பழக்கத்தை உருவாக்கிய மனிதர் அப்துல்லாஹ் பின் முஹம்மது பின் அப்துல்லாஹ் கதா என்பவர் ஆவார். இவரைப் பின்பற்றுபவர்கள் பாத்தினி என்ற அழைக்கப்படுகின்றனர். இவர் தம்மை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் சந்ததி என்று கூறியுள்ளனர். பாத்னி மதத்தை உருவாக்கியவர்களுள் இவரும் ஒருவர் ஆவார். பாத்னி மதம் என்பது ஷரீஅத்தின் சில பகுதிகளை வெளிப்படுத்தியும், சில பகுதிகளை மறைத்தும் விடுகிறது. இவர்கள் கூறுகின்ற ஷரீஅத்தின் படி எதிரிகளை ஏமாற்றிக் கொல்வது ஆகுமானதாகும். இவ்வாறு இஸ்லாத்தில் பல பித்அத்துகளை இஸ்லாத்தில் இவர்கள் நுழைத்து விட்டார்கள்.

முதன் முதலில் இஸ்லாத்தில் மீலாதுந் நபி கொண்டாட்டத்தை நுழைத்தது பாத்னியா மதத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களால் தொடங்கப்பட்ட இந்த செயல் நிச்சயம் ஒரு பித்அத் ஆகும். எகிப்தில் இவர்களின் ஆட்சி காலம் 362 ஹிஜ்ரி வருடம் என கூறப்படுகிறது. இது தவிர இவர்கள் இன்னும் பல தினங்களை கொண்டாடி வந்தனர். உதாரணமாக, யவ்முஷ் ஷுரா, மீலாதுந்நபி, மீலாத் ஹஸ்ரத் அலி (ரலி), மீலாத் ஹஸ்ரத் ஹஸன் (ரலி), மீலாத் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி), மீலாத் ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹ்ரா (ரலி), ரஜப் மாதத்தின் முதல் இரவு, மத்திய இரவு, ஷஃபான் மாதத்தின் முதல் இரவு, இது தவிர கதம் இரவு ஆகிய இந்த தினங்களையெல்லாம் இவர்கள் கொண்டாடி வந்தனர். இது மட்டுமின்றி இன்னும் பல தினங்கள், பல நிகழ்ச்சிகள் இவர்கள் கொண்டாடுவதுண்டு. எண்ணற்ற நிகழ்ச்சிகள் கொண்டாடுகின்ற பழக்கம் இஸ்லாத்தில் பித்அத்துகளை உருவாக்கி விட்டது.

முஸ்லிம்களில் சில பிரிவினர் இதை பித்அத் என்று கருதி இவைகளை கொண்டாடுவதில்லை. இன்னும் மற்ற பிரிவினர் எல்லை மீறி இந்த நாட்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டாடி வருகின்றனர்.

இக்காலகட்டத்தில் இறைவன் (ஹகம், அத்ல்) மார்க்க விஷயங்களில் நீதியுடன் தீர்ப்பு வழங்குபவராக ஒரு இமாமை அனுப்பியுள்ளான். அவர்கள் இது தொடர்பாக என்ன கூறுகிறார்கள் என்று பார்ப்போம்.

ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், மவ்லூத் ஓதுவது தொடர்பாக கேள்வி கேட்டார். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைவு கூர்வது மிகவும் சிறந்ததாகும். நபிமார்களையும், இறை நெருக்கம் பெற்றவர்களையும் நினைவு கூறுவதால் இறைவனின் கருணை கிடைக்கிறது என்று ஹதீஸின் மூலம் புலனாகிறது. நபிமார்களை நினைவு கூற வேண்டும் என்று அல்லாஹ்வும் கூறுகின்றான். ஆனால் தவ்ஹீதிற்கு இடையூறாக இருக்கின்ற பித்அத்துகள் இதில் நுழைந்து விட்டால் பிறகு அது ஆகுமானது அல்ல. இறைவனின் கண்ணியத்தை இறைவனுக்கும், நபியின் கண்ணியத்தை நபிக்கும் வழங்குங்கள். இன்றைய காலத்து மவ்லவிகள் ஓதுவதில், பித்அத்தான வாக்கியங்கள் அதிகம் காணப்படுகிறது. இது இறைவனுக்கு விருப்பம் அல்ல. பித்அத் இல்லை என்றால் அது ஒரு நல்ல அறிவுரையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பிறப்பு, வருகை, மரணம் தொடர்பான நினைவுகளை (மனதில்) கொள்வது நன்மையாகும். ஆனால் ஒரு புதிய ஷரீஅத்தை உருவாக்கிக் கொள்ள நமக்கு உரிமை இல்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை எடுத்துரைப்பது மிகவும் நல்ல விஷயம்தான். ஆனால் இன்றைய நாட்களில் குறிப்பாக பாகிஸ்தான், இந்தியாவில் இந்த மாநாடுகளை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்வை எடுத்துரைப்பதற்குப் பதிலாக இதை அரசியலாக்கிக் கொள்கிறார்கள். அல்லது ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரின் மீது குற்றச்சாட்டுகளையும், சேற்றை அள்ளி எறியவும் இந்த நாட்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பாகிஸ்தானில் இந்த மீலாதுந்நபி மாநாட்டில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை மட்டும் எடுத்துரைத்து விட்டு மாநாட்டை முடித்ததாக நாம் எங்கும் பார்க்க முடியாது. மாறாக, ஒவ்வொரு இடத்திலும் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் மீதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மீதும் எல்லை மீறி ஏசுவதும், வீணானவற்றைக் கூறுவதும் தொடர்ந்து நடந்து வருகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏளனத்திற்கு ஆளாக்கிக் கொள்கின்றனர்.

ரப்வாவில் கடந்த நாட்களில் ஜமாஅத்திற்கு எதிராக ஊர்வலமும், மாநாடும் நடத்தப்பட்டது. அங்கிருந்து எனக்கு வந்த தகவலைப் பார்க்கும்போது இவர்கள் அஹ்மதிகளுக்கு எதிராக தங்களது பொறாமையையும், காழ்ப்புணர்ச்சியையும் வெளிப்படுத்துவதற்காகவும், அரசியல் நோக்கங்களுக்காகவும் தான் இந்த மாநாட்டை நடத்தியிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

இவ்வாறான மாநாட்டினால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகை ரஹ்மத்துல் லில் ஆலமீன் ஆக இருந்தது. அகில உலகங்களுக்கும் கருணையாக அவர்கள் வந்தார்கள். எதிரிகளுக்காகவும் அழுதழுது துஆ செய்து வந்தார்கள்.

ஒரு சஹாபி அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு இணைந்து தஹஜ்ஜுத் தொழும் நற்பாக்கியம் எனக்கு கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு தொடர்ந்து துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! இந்த சமுதாயத்தை மன்னிப்பானாக. இவர்களுக்கு நல்லறிவை வழங்குவாயாக.

ஆனால் இந்தக் காலத்து முல்லாக்கள் இந்த சுன்னத்தை பின்பற்றுவதற்குப் பதிலாக, அவர்களின் கூற்றின்படி காதியானிகள் (நமது சொல்லின்படி அஹ்மதிகளுக்கு) எதிராக எந்த அளவுக்கு தீய வார்த்தைகளைப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பயனபடுத்துகின்றார்கள்; குற்றம் சுமத்துகின்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பாருங்கள். ஒரு சஹாபி போரின்போது எதிரியை வீழ்த்தி விடுகிறார். அப்போது எதிரி கலிமா சொல்லிவிட்ட பிறகும் அந்த சஹாபி அவரை கொன்று விடுகிறார். இந்த சம்பவம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்ததும் நீர் அவருடைய

உள்ளத்தைப் பிளந்து பார்த்தீரா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கோபம் எந்த அளவு கடுமையாக இருந்தது என்றால், இதற்கு முன் நான் முஸ்லிம் ஆகாமல் இருந்திருக்க வேண்டும் என்று அந்த சஹாபி எண்ணினார். ஆனால் இந்த உலமாக்களின் செயல்கள் இதற்கு நேர் மாற்றமாக உள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக என்ன கூறுகிறார்கள்? என நான் இப்போது எடுத்துரைக்கிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைவு கூர்வது மிகவும் நல்ல விஷயமாகும். இதனால் அன்பு அதிகரிக்கிறது. அவர்களைப் பின்பற்ற வேண்டும் என்ற ஆர்வம் எழுகிறது. எனவே, திருக்குர்ஆனில் கூட சில நபிமார்களை நினைவு கூற வேண்டும் என்ற கட்டளை உள்ளது. உதாரணமாக இறைவன் கூறுகிறான்:

**வஸ்குர் ஃபில் கிதாபி இப்ராஹீம.** ஆனால் நினைவு கூறுகின்றபோது அதில் சில பித்அத்துகளைச் சேர்த்து விடுகின்றபோது அது ஹராமாகி விடுகிறது. இஸ்லாத்தின் மேலான குறிக்கோள் தவ்ஹீது ஆகும். மவ்லூது ஓதுகின்ற மஜ்லிஸை நடத்துபவர்களிடம் பல பித்அத்துகள் இணைந்து விட்டதை நாம் பார்க்கின்றோம். இந்த பித்அத்துகள் ஒரு நல்ல காரியத்தை கெடுத்து விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைவு கூர்வது இறைவனின் கருணைக்கு நம்மை வாரிசாக்கும். ஆனால் ஷரீஅத்தில் இல்லாத பித்அத்துகள் அல்லாஹ்வின் விருப்பத்திற்குரியவை அல்ல. நாம் ஒரு புதிய ஷரீஅத்திற்கு அடிக்கல் நாட்டக் கூடாது. ஆனால் இன்றைய காலத்தில் இதுதான் நடந்து வருகிறது. ஒவ்வொருவரும் தத்தமது எண்ணத்தின் அடிப்படையில் ஒரு புதிய ஷரீஅத்தை உருவாக்க விரும்புகின்றனர்.

இந்த விஷயத்திலும் ஏற்ற இறக்கத்துடன் செயல்படுகின்றனர். சிலர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைவு கூர்வது அறவே ஹராம் என்று கூறுகின்றனர், நவூதுபில்லாஹ். இது அவர்களின் முட்டாள்தனமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைவு கூர்வதை ஹராம் என்று கூறுவது வரம்பு மீறுவதாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்கான சிறந்த வழியாகும். நினைவு கூர்வதால் பின்பற்ற வேண்டும் என்ற தூண்டுதல் ஏற்படுகிறது. ஒருவர் மற்றவரை நேசிக்கின்றார் என்றால் அவரை நினைவு கூறுவார். மவ்லூது ஓதிக்கொண்டிருக்கும் போதே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நேரில் வந்து விட்டார்கள் என்று எண்ணி மரியாதை நிமித்தம் எழுந்து நிற்பது எல்லை மீறிய செயலாகும்.

சில நேரம் மவ்லூது மஜ்லிஸில் ஓதப்பட்டுக் கொண்டிருக்கும். சொற்பொழிவு நிகழ்த்துபவர் திடீரென்ற ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நேரில் வந்து விட்டார்கள் என்று கூறுவார். அப்போது அங்கு அமர்ந்திருப்பவர்கள் எல்லாரும் எழுந்து நின்று விடுவார்கள்.

நாம் சில நேரம் பார்க்கின்றோம். மவ்லூது மஜ்லிஸில் உட்கார்ந்திருக்கும் பெரும்பாலானவர்கள் தொழாதவர்கள்தான். ஐவேளை தொழுகைகளை தொழாதவர்கள்தான் அந்த மஜ்லிஸில் அமர்ந்திருப்பார். பெரும்பாலானவர்கள் பெருநாள் தொழுகை மட்டும் தொழக்கூடியவர்களாகத்தான் இருப்பார்கள். வட்டி வாங்குபவர்களும், மது அருந்துபவர்களும் அந்த மஜ்லிஸில் இருப்பார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கும், இந்த மஜ்லிஸுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது. இந்த மக்கள் கச்சேரிக்காக ஒன்றுகூடுகிறார்கள். எனவே இவ்வகையான சிந்தனை வீணானதாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நேசத்தை உள்ளத்தில் கொள்ளாமல் இருப்பவர் மார்க்கம் அற்றவராவார். நபிமார்களின் வருகை அருளுக்குரிய மழையைப் போன்றது. ரஸூல் மிகவும் உயர்ந்தவர் ஆவார். உலகத்திற்கு அவருடைய வருகையில் மாபெரும் அருள்கள் உள்ளன. தம்மைப்போன்று நபியையும் எடை போடுவது கொடுமையாகும். நபிமார்களையும், வலிமார்களையும் நினைவு கூர்வதால் ஈமானின் திறன் அதிகரிக்கும்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹதீஸில் இவ்வாறு வருகிறது. சொர்க்கம் ஒரு உயர்ந்த படித்தரம் ஆகும். அதில் நான் இருப்பேன். இதைக் கேட்ட ஒரு சஹாபி அழத் தொடங்கினார். அவர் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது மிகவும் அன்பு கொண்டவராவார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் உங்களை அதிகம் நேசிக்கின்றேன் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீ என்னுடன் இருப்பாய் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நான் அந்த உயர்ந்த சொர்க்கத்தில் இருப்பேன் என்று கூறியவுடன் அந்த சஹாபி ஒருவேளை நான்அங்கு செல்ல முடியாது என்று கருதி அவ்வாறு கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீரும் என்னுடன் இருப்பீர் என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஷிர்க்கான வழியைப் பின்பற்றுகின்ற மற்றொரு பிரிவினரிடமும் மார்க்கம் இல்லை. அவர்களிடம் கபர் வணக்கத்தைத் தவிர வேறெதுவும் இல்லை. என்னுடைய நம்பிக்கை, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை நினைவு கூறுவது வஹாபிகள் நம்புவது போன்று ஹராம் இல்லை. மாறாக, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதற்கு இது ஒரு ஊக்கமாகும். ஷிர்க்கான வழிகளில் உருவாக்கப்படுகின்ற பித்அத்துகள் ஹராமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒருவர் கேள்வி கேட்டதற்கு அவர்கள் கடிதம் மூலம் இவ்வாறு பதில் எழுதினார்கள். என்னுடைய கருத்தின்படி பித்அத் இல்லாமல் ஒரு மாநாடு நடத்தலாம். அதில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் சொற்பொழிவுகள் வைக்கலாம். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து அழகிய குரலில் கவிதைகள் பாடலாம். இவ்வாறான நிகழ்ச்சிகள் நடத்துவது நல்லது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**இன் குன்தும் துஹிப்பூனல்லாஹ ஃபத்தபிஊனி** – நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள்.

மேலும் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரொட்டிகளை வைத்து திருக்குர்ஆன் ஓதியதுண்டா? இன்றைய நாட்களில் மவ்லவிகள் மாநாடுகளை நடத்துகிறார்கள்; திருக்குர்ஆன் ஓதுகின்றார்கள். அதற்குப் பிறகு ரொட்டிகள் விளம்பப்படுகின்றன. இது மவ்லூது ரொட்டி ஆகும். மேலும் பரக்கத்துள்ள ரொட்டி என்று கூறுகிறார்கள்.

நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுங்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுங்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரொட்டியை வைத்து திருக்குர்ஆன் ஓதினார்களா? ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு ரொட்டியை வைத்து திருக்குர்ஆன் ஓதி இருப்பார்களேயானால் நாம் ஓர் ஆயிரம் ரொட்டியை வைத்து திருக்குர்ஆன் ஓதுவோம். ஆனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அழகிய குரலில் திருக்குர்ஆன் ஓதக் கேட்டார்கள். திருக்குர்ஆன் ஓதுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வ ஜிஃனா பிக் அலா ஹாஉலஇ ஷஹீதா என்ற வசனம் வரும்போது அழுதார்கள்.

இந்த வசனத்தின் பொருள், மேலும் உம்மை அனைவருக்கும் சாட்சியாக கொண்டு வரப்படும்போதும்..... இந்த வசனத்தின் இறுதிப் பகுதி வந்த போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அழுதார்கள். அவர்களுடைய இந்த அழுகை கீழ்ப்படிதலின் உச்சகட்டமாகும். அல்லாஹ்வின் மீது கொண்ட எல்லையில்லா அன்பின் காரணமாகவே அவர்கள் அழுதார்கள். இவ்வாறு அழுது கொண்டே கூறினார்கள். என்னால் இதற்கு மேல் திருக்குர்ஆனைக் கேட்க முடியாது. இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். நல்ல குரல் வளம் உள்ள ஹாஃபிஸிடம் திருக்குர்ஆன் ஓதக் கேட்க வேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டு.

இதுவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாகும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு செயலுக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். எனவே, ஒரு உண்மையான மூஃமின் இந்த செயலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்துள்ளார்களா? இல்லையா? என்று மட்டும் பார்த்தால் போதும். ஒரு செயலை அவர்கள் செய்யவில்லையென்றால் அதை செய்வதற்கு கட்டளை இட்டுள்ளார்களா? என்று பார்க்க வேண்டும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மூதாதையர் ஆவார். மிகவும் கண்ணியத்திற்குரியவரும் ஆவார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மவ்லூதை ஏன் ஓதவில்லை? அவர்களின் பிறந்த நாளை ஏன் கொண்டாடவில்லை?

சுருக்கமாக கூறுவதென்றால், மவ்லூது நாளன்று மாநாடுகள் நடத்துவது தவறல்ல. அதில் எவ்வித பித்அத்தும் இருக்கக் கூடாது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கலாம். மவ்லூது நாளில் மட்டும் தான் இந்த நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்பதல்ல. மாறாக, வருடம் முழுவதும் ஏதாவதொரு நாள் இந்த நிகழ்ச்சியை நடத்தலாம். இதுவே அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நடைமுறையாகும். முழு உலகிலும் அல்லது முழு நாட்டிலும் இதற்கென்று ஒரு நாளை நியமித்துக் கொண்டாலும் தவறில்லை. ஆனால் அந்த நிகழ்ச்சிகளில் பித்அத்துகள் நுழைந்து விடக் கூடாது. இந்த மாநாட்டை நடத்திவிட்டால் பிற நன்மைகள் எதுவும் செய்ய வேண்டியதில்லை என்று ஒருபோதும் மனதில் எண்ணிவிடக்கூடாது. இதில் எந்தவித கூடுதல் குறைவும் இருக்கக்கூடாது.

எஞ்சியுள்ள நேரத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின அழகிய வாழ்க்கையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒளியில் சிலவற்றை எடுத்துக் கூறுகிறேன். இந்த போதனைகளை நாம் நமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான், நாம் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியது போன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றியவாறு அல்லாஹ்வின் அன்பை பெற முடியும். அப்போதுதான் நமது பாவங்கள் மன்னிக்கப்படும். அப்போதுதான் நமது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை வஸீலாவாக ஆக்கி (அதாவது அவர்களின் மூலமாக) துஆ செய்யலாமா? என்று சிலர் கேட்கின்றனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றுவது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கான வஸீலா (அதாவது வழி) ஆகும்.

பாங்கு கொடுத்த பிறகு செய்யப்படுகிற துஆவில் இது கற்றுத் தரப்பட்டுள்ளது.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

**குல் இன் குன்தும் துஹிப்பூனல்லாஹ் ஃபத்தபி ஊனீ யுஹ்பிப்குமுல்லாஹ் வயக்ஃபிர் லகும் ஸுனூபகும்** - நீர் கூறுவீராக. நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கின்றீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அவனும் உங்களை நேசிப்பான். உங்களது பாவங்களை மன்னித்து விடுவான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த சுன்னத்தை நிலைநாட்டினார்கள். அவர்கள் சஹாபாக்களின் மத்தியில் எந்த செயல்களை விட்டுச் சென்றார்கள்? என்பதை நாம் பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உலக ஆசைக்காகவும், நாட்டைக் கைப்பற்றுவதற்காகவும் தான் போர் தொடுத்தார்கள் - நவூதுபில்லாஹ் என்று அந்த தூய நபியின் மீது எதிரிகள் ஆட்சேபனை செய்கின்றார்கள். அதுமட்டுமல்ல, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய மனைவிமார்கள் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார்கள். இவர்கள் எழுதி வைத்திருக்கின்ற புத்தகங்கள் நேர்மை உள்ளம் கொண்ட எந்த மனிதரும் வாசிக்க முடியாது. அமெரிக்காவில் இப்போது வெளிவந்த ஒரு நூலைப் பற்றி ஒரு கிறித்தவர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறுகிறார். இந்த நூலை நல்ல உள்ளம் கொண்ட எவராலும் வாசிக்கவே முடியாது. அந்த அளவுக்கு அது மிகவும் கீழ்த்தரமாக உள்ளது.

ஆக, இவ்வனைத்து ஆட்சேபனைகளையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது சுமத்துகின்றனர். இது ஒன்றும் இந்த எதிரிகளுக்கு புதியதல்ல. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் தூய வாழ்வின் மீது வழக்கமாக ஆட்சேபனை செய்துதான் வருகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தம்மை நபி என்று வாதித்த போதும் கூட மக்கத்துக் காஃபிர்கள் இவர் உலக ஆசை கொண்டு இவ்வாறு வாதம் செய்கிறார் என்றுதான் நம்பினார்கள். அப்போது அந்த காஃபிர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை மூலம் செய்தி அனுப்பினர். நீங்கள் எங்களது தெய்வங்களையும், சிலைகளையும் குறை கூறுவதை விட்டு விலக வேண்டும். உங்களது மார்க்கத்தை நீங்கள் பரப்பக் கூடாது. இதற்கு வெகுமதியாக நாங்கள் உங்களை எங்களது தலைவராக ஏற்றுக் கொள்கிறோம். எங்களிடம் உள்ள அனைத்து பௌதீக செல்வாக்கையும் உங்களுக்கு தருகிறோம். சொத்து சுகங்களையும் தருகிறோம். அரபு நாட்டின் அழகிய மங்கையரையும் தருகிறோம் என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், நீங்கள் எனது வலது கையில் சூரியனையும், இடது கையில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்தாலும் நான் எனது கடமையைச் செய்வதிலிருந்து பின்வாங்கமாட்டேன் என்று கூறினார்கள். இந்த காஃபிர்களின் தீமைகளை இவர்களுக்கு எடுத்துக்கூறி இவர்களை நேரான வழியில் நடத்துவதற்காக நான் வந்துள்ளேன். இந்த பாதையில் நான் மரணிக்க நேர்ந்தாலும் மிக்க மகிழ்ச்சியுடன் மரணத்தை ஏற்றுக் கொள்வேன். எனது வாழ்க்கை இந்த பாதையில் அர்ப்பணம் ஆகியுள்ளது. மரண பயம் என்னை இந்த பணியைச் செய்வதிலிருந்து தடுக்க முடியாது. அவ்வாறே எந்த வகை பேராசையும் என்னை இதிலிருந்து தடுக்க முடியாது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் ஒப்படைத்த பணியையும் அல்லாஹ்வின் கட்டளையினால் அவர்கள் செய்து வந்த பணியையும் உலகவாதிக எப்போதும் அற்பமான ஒன்றாகவே கருதினார்கள். காஃபிர்கள் இதற்காக ஆசையும் காட்டினார்கள். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காஃபிர்களின் அனைத்து ஆசை வார்த்தைகளையும் நிராகரித்து, உலக ஆசைக்காகத்தான் இந்த வாதம் புரிந்தார்கள் என்ற ஆட்சேபனையை முற்றிலும் மறுத்து விட்டார்கள். நான் வானங்கள், பூமி ஆகியவற்றின் இறைவன் புறமிருந்து வந்துள்ள தூதர் ஆவேன். ஓர் இறைவனின் ஏகத்துவத்தின் கொடியை முழு உலகிலும் நிலைநாட்ட வந்த இறுதி நபி ஆவேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு பிரகடனம் செய்ததன் உண்மைத்துவத்தை அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த வசனத்தின் மூலம் தெளிவுபடுத்துகிறான்.

**குல் இன்னஸ் ஸலாத்தீ வ நுஸுகி வமஹ்யாய வமமாத்தி லில்லாஹி ரப்பில் ஆலமீன்** – நீர் கூறுவீராக. எனது தொழுகை, எனது தியாகம், எனது வாழ்வு, எனது மரணம் இவ்வனைத்தும் அல்லாஹ்விற்காகவே ஆகும். அவன் அகில உலகங்களுக்கும் இறைவன் ஆவான்.

இதுவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இறைவன் மீது கொண்ட நேசமாகும். உச்சி முதல் உள்ளங்கால் வரை இறை நேசத்தில் மூழ்கி இருந்தார்கள். உலக செல்வாக்கோ, செல்வமோ அவர்களுக்கு தேவையில்லை. அவர்கள் ஓர் இறைவனின் ஆட்சியை முழு உலகிலும் நிலைநாட்ட விரும்பினார்கள். இதற்காக அவர்கள் எல்லா துக்கத்தையும் சகித்துக் கொண்டார்கள். நீங்கள் நிரந்தரமான வாழ்க்கையை விரும்புகிறீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள் என்று உலக மக்களுக்கு முன் அறிவித்தார்கள். நான் உங்களுக்கு எந்த முன்மாதிரியைக் காட்டியுள்ளேனோ அதனை பின்பற்றி தொழுகையில் உயர்ந்த நிலையை அடைய முயற்சி செய்யுங்கள்.

இறைவணக்கத்தில் மூழ்குவதுதான் வாழ்க்கையின் ஆதாரமாகும். உண்மையான மரணம் வரும் முன் தியாகத்தின் மூலம் நான் செய்து காட்டிய செயலின் அடிப்படையில் ஒரு ஆன்மீக மரணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். இவ்வாறு ஒரு மரணம் வந்த பிறகு நிரந்தரமான வாழ்க்கை உங்களுக்கு கிடைத்து விடும். அந்த வாழ்க்கை இறைவனின் விருப்பத்தைப் பெறக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறு தொழுகையும், தியாகமும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் வாழ்வு, மரணம் ஆகியவற்றின் ஒரு புதிய பாதையை உருவாக்கி விட்டது.

எனக்கு உலக ஆசை காட்டுகிறீர்களா? கொடுமைக்கு என்னை ஆளாக்குகிறீர்களா? எனது ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வுக்காகவே ஆகும். எல்லாமே அல்லாஹ்வுக்காக ஆகி விடும் போது அந்த மனிதரின் உலக வாழ்வு ஒரு பொருட்டே அல்ல. மரணமும் அவருக்கு ஒரு பொருட்டே அல்ல என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உலகிற்கு எடுத்துரைத்தார்கள்.

எனவே இவ்வாறு எனது செயல் உள்ளது. நீங்களும் **ஃபத்தபிஊனி** – என்னைப் பின்பற்றுங்கள் என்ற கட்டளையின் அடிப்படையில் இவ்வழியில் முன்னேற முயற்சி செய்யுங்கள்.

இன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரின் ஜமாஅத்தையும் உலகில் பல நாடுகளில் அச்சுறுத்த முயற்சி செய்கிறார்கள். பாகிஸ்தானில் அன்றாடம் ஏதாவது ஒரு சம்பவம் நடந்து வருகிறது. இந்தியாவில் முஸ்லிம்கள் அதிகம் உள்ள இடங்களில் அஹ்மதிகளின் மீது கொடுமை இழைக்கப்படுகிறது. குறிப்பாக புதிய அஹ்மதிகளை நன்றாக அச்சுறுத்துகிறார்கள்.

ஐரோப்பிய நாடான பல்கேரியாவிலிருந்து சில நாட்களுக்கு முன் எனக்கு ரிப்போர்ட் வந்துள்ளது. அங்கும் அஹ்மதிகளின் மீது கொடுமையிழைக்கப்பட்டு வருகிறது. பல்கேரியா இப்போது புதிதாக ஐரோப்பிய யூனியனில் இணைந்துள்ளது. இங்கும் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகம் உள்ளது. அங்குள்ள ஒரு முஃப்தி – மார்க்கத் தீர்ப்பு வழங்குபவர் கூறியதன் அடிப்படையில் காவல்துறை 7, 8 அஹ்மதிகளை கைது செய்துள்ளது. அவர்களோடு கடுமையாக நடந்துள்ளது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் அனைவரும் ஈமானில் நிலைத்து நிற்கின்றனர்.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீதும் அவர்களின் சஹாபாக்களின் மீதும் என்னென்ன கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அந்த துன்பத்தில் ஒரு பகுதி கூட நம்மீது இழைக்கப்படவில்லை. இந்த உண்மையை நாம் புரிந்து கொண்டு இறை வணக்கத்தையும் தியாகங்களையும் அல்லாஹ்வுக்காக மட்டும் நாம் தூய்மையான சிந்தனையோடு செய்தால், நமது வாழ்வும், மரணமும் இறைவனுக்காகத்தான் என்று செயல்பட்டால் எங்கு நாம் தனி நபர் என்ற ரீதியில் நிரந்தரமான வாழ்வுக்கு வாரிசாவோமோ அங்கு ஒவ்வொரு அஹ்மதியும் ஆயிரக்கணக்கான சிறந்தவர்களுக்கு உயிர் கொடுக்க காரணமாக அமைவார்.

எனவே முதல் வேலையாக துஆவின் பால் குறிப்பாக கவனம் செலுத்தியவாறு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உயரிய முன்மாதிரியைப் பின்பற்றியவாற முழு உலகிற்கும் நேர்வழியைப் பரப்ப ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்து வர வேண்டும். நமது செயல் நல்லதாக இருக்கும் என்றால், ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் சுன்னத்தைப் பேணுகிறோம் என்றால் நமது வாழ்வை சீர் செய்ததோடு உலக மக்களின் வாழ்வையும் சீர் செய்யலாம். இதற்காக நாம் நமது இறைவணக்கத்தின் உயர்ந்த தரத்தை அடைய வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நம்மிடையே விட்டுச் சென்ற முன்மாதிரியைப் பேண வேண்டும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இறை வணக்கம் எவ்வளவு உயர் தரமாக இருந்தது!

**ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஓர் இரவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் வந்தார்கள். வழக்கமான ஒன்பதாவது இரவு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னுடன் இருப்பார்கள். இரவு நான் கண் விழித்த போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் படுக்கையில் இல்லை. நான் சற்று பதட்டமடைந்தேன். அப்போது வெளியில் வந்து பார்த்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொழுகையில் சஜ்தா செய்த நிலையில் இருந்தார்கள். அப்போது அவர்கள் இவ்வாறு துஆ கேட்டதை நான் கேட்டேன்.

என் இறைவனே! எனது உள்ளமும் எனது ஆன்மாவும் உனது சன்னிதானத்தில் சிரம் பணிந்துள்ளன.

ஆக இதுவே உண்மையான நேசத்தை வெளிப்படுத்தும் முறையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தூங்கும் போதும் அல்லாஹ்வை நினைவு கூறுவதை இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்.

எனது இரு கண்களும் தூங்குகின்றன. ஆனால் உள்ளம் விழித்திருக்கிறது. உள்ளம் விழித்திருக்கின்ற வேளையில் அல்லாஹ்வை நினைவு கூர்ந்து கொண்டிருக்கும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பல்வேறு நிலையில் பல்வேறு நேரங்களில் தங்களது செயல்ரீதியாக செய்து காட்டிய துஆக்கள் அனைத்தும், அவர்களது இபாதத்தின் உயர் தகுதியை நமக்கு சுட்டிக் காட்டுகின்றன.

இந்த சிந்தனையைத்தான் அவர்கள் நமக்கு வழங்கியிருக்கிறார்கள். அதாவது ஒரு மூஃமினுடைய ஒவ்வொரு செயலும் இறை வணக்கமாக முடியும். செய்யப்படுகின்ற செயல் இறைவனுக்காக இருக்க வேண்டும். இறைவனை நினைவூட்டுவதாக இருக்க வேண்டும். இறைவனின் நெருக்கத்தை இந்த செயல் எனக்கு பெற்றுத் தரும் என்ற நிய்யத் இருக்க வேண்டும்.

உதாரணமாக, ஒருமுறை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஒரு சஹாபியின் வீட்டிற்கு சென்றார்கள். அந்த சஹாபி புதிதாக ஒரு வீடு கட்டியிருந்தார். அந்த வீட்டில் ஜன்னல் இருந்தது. ஜன்னல்கள் வீட்டில் எதற்காக வைக்கப்படுகின்றன என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனினும் அந்த சஹாபியின் தர்பிய்யத்திற்காக அவரிடம் இந்த ஜனனல் எதற்கு? என்று கேட்டார்கள். அதற்கு அவர் காற்றும், வெளிச்சமும் வருவதற்காக வைத்துள்ளேன் என்ற கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் சரியாகச் சொன்னீர். ஆனால், பாங்கு சப்தம் வரும். அதைக் கேட்டு நான் தொழுகைக்காகச் செல்வேன் என்ற எண்ணமும் இருந்தால் நீர் கூறியது போல் காற்றும், வெளிச்சமும் வருவது வரத்தான் செய்யும். அதோடு இதற்கான நற்கூலியும் உமக்கு கிடைத்திருக்கும் என்று கூறினார்கள்.

இன்னொரு ஹதீஸில் இவ்வாறு அறிவிப்பு வருகிறது. ஒருவர் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக தன் மனைவியின் வாயில் ஒரு கவளம் ஊட்டினாலும் அதற்கான கூலி அவருக்கு கிடைக்கும் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இங்கு மனைவியின் வாயில் ஒரு கவளம் ஊட்டுவது என்பதன் பொருள், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக மனைவி மக்களை பராமரிப்பது, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது என்பது ஆகும். தனது வீட்டின் பொறுப்பை பேணுவது ஒரு ஆணுக்கு கடமையாகும். எனவே, இறைவன் என்மீது இந்த கடமையைச் சுமத்தியுள்ளான் என்ற சிந்தனையோடும் எனது மனைவி தனது சொந்த வீட்டை விட்டு எனது வீட்டிற்கு வந்துள்ளாள். அவளுக்குரிய உரிமையைக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் உரிமையைக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையும் இருந்தால் ஒரு கடமையைச் செய்வது கூட நன்மையாக மாறி விடுகிறது. இதுவும் இறைவணக்கமாகும். ஒவ்வொரு அஹ்மதியும் இந்த ரீதியில் சிந்தித்தால் இன்றைய நாட்களில் நடக்கின்ற குடும்பப் பிரச்சனைகள், சின்னச்சின்ன சண்டைகள், சச்சரவுகள் இதிலிருந்தும் தப்பித்து விடலாம்.

மனைவி தனது கடமையை உணர்ந்து கொள்வாள். கணவனுக்குத் தொண்டு செய்யும் பொறுப்பை அல்லாஹ் என்னிடம் ஒப்படைத்துள்ளான். எனவே அதன் உரிமையை நான் பேண வேண்டும். இந்த கடமையை இறைவனுக்காக நான் செய்தால் அதற்கு நன்மை கிடைக்கும் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு இரண்டு பேருடைய செயலும் இறைவனுடைய விருப்பத்தைப் பெறுவதற்காக இருந்தால் அது இபாதத் ஆகி விடுகிறது. அதற்கான நற்கூலியும் கிடைக்கும்.

மனிதன் இவ்வகையான சிந்தனைகளை மனதில் கொள்ள வேண்டும். சின்னச்சின்ன விஷயங்கள் கூட வீட்டை சொர்க்கமயமாக்கி விடுகிறது.

ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களின் இறைவணக்கம் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் ஒரு அறிவிப்பு ஹதீஸில் வருகிறது.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஓர் இரவு தஹஜ்ஜுத் தொழுகையின் போது சஜ்தாவில் இவ்வாறு துஆ செய்வதை நான் கண்டேன்.

என் இறைவா! உன் சன்னிதானத்தில் எனது உள்ளமும் ஆன்மாவும் சிரம் பணிந்துள்ளது. எனது உள்ளம் உன்னை ஈமான் கொள்கிறது. எனது இரு கைகளையும் உன் முன்னால் ஏந்துகிறேன். எனது உயிருக்கு இவைகளைக் கொண்டு நான் இழைத்த கொடுமைகளும் உன் முன் உள்ளன. கண்ணியவாளனே! உன்னிடமே கண்ணியங்கள் வேண்டப்படுகின்றன. எனது பெரும் பாவங்களை மன்னிப்பாயாக. தொழுகையை முடித்து ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வந்தவுடன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் இவ்வாறு துஆ செய்ய வேண்டும் என்று எனக்கு இந்த சொற்களைக் கற்றுத் தந்துள்ளார்கள். நீயும் இதை ஒது என என்னிடம் கூறினார்கள்.

எனது இறைவணக்கம், எனது தியாகங்கள், எனது வாழ்வு, எனது மரணம் அனைத்தும் இறைவனுக்காகவே ஆகும் என்று அறிவிக்கும்படி அல்லாஹ் அவர்களிடம் கூறினான். அந்த இறையடியார் மிகவும் பணிவோடும், இறையச்சத்தோடும் இந்த துஆவை செய்கிறார்கள். நான் எனது உயிருக்கு தீங்கிழைத்து விட்டேன். எனவே எனது பாவங்களை மன்னிப்பாயாக என்று துஆ செய்து உண்மையில் நமக்காக இந்த முன்மாதிரியைக் காட்டினார்கள்.

உங்களது ஏதாவதொரு நன்மைக்காக ஒருபோதும் பெருமை கொள்ளாதீர்கள். மாறாக, அல்லாஹ்வின் அடியாராக அவன் முன் எப்போதும் குனிந்திருங்கள் அவனுடைய அருளை வேண்டிக் கொண்டிருங்கள்

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உங்களுக்கு முன் இருந்த சமுதாயங்கள் அழிந்ததன் காரணம், அந்த சமுதாயத்தின் பெரியவர்கள் தவறிழைத்து விட்டால், அவர்களை தண்டிக்காமல் விட்டு விடுவர். பலவீனமானவர் ஏதாவது தவறிழைத்து விட்டால் அவருக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. இது எனது உம்மத்தில் இருக்கக் கூடாது.

ஆனால் இந்த குற்றம் இந்த உம்மத்தில் மிகவும் அதிகமாக நமக்கு காணப்படுகிறது. இந்த அநியாயம் முஸ்லிம்களிடம் உருவாகி விட்டது.

ஒரு கோத்திரத்தின் கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் ஒரு முறை திருடி விட்டாள். அவளுடைய பெயரும் ஃபாத்திமா ஆகும். திருட்டிற்கான தண்டனையை நிறைவேற்ற ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். சஹாபாக்கள் அவளை அதிலிருந்து காப்பாற்ற முயற்சி செய்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இதைக் கூற யாருக்கும் தைரியம் வரவில்லை. இறுதியில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களை சிபாரிசு செய்யுமாறு வற்புறுத்தி அனப்பினர். அப்போது உஸாமா (ரலி) அவர்கள் சிபாரிசு செய்தார்கள். அதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகம் கோபத்தால் சிவந்து விட்டது. நீங்கள் இந்த பெண்ணுக்கு சிபாரிசு செய்கிறீர்கள். இவளுடைய இடத்தில் எனது மகள் ஃபாத்திமா இருந்தாலும் நான் இந்த தண்டனையை வழங்க தீர்ப்பு கூறியிருப்பேன்.

ஆக, இதுவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய நீதியாகும்.

அபூஸர் அல் கஃப்பாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு முறை நான் இரண்டு பையன்களுக்கு ஸக்காத் பணம் வசூலிக்கும் வேலையை வழங்க வேண்டும் என்று சிபாரிசு செய்தேன். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூஸர் அவர்களே! நன்றாக கேளுங்கள். பதவிக்கு யார் ஆசைப்படுகிறாரோ அவருக்கு நாம் பதவியை வழங்குவதில்லை. இறைவன் ஒரு பொறுப்பை ஒப்படைக்கும்போது அந்த பொறுப்பை நிறைவேற்ற உதவி செய்கிறான். ஒருவர் ஒரு பொறுப்பை விரும்பாத நிலையில் அல்லாஹ்வே அந்த பொறுப்பை அவர் மீது சுமத்துகின்றான் என்றால் பிறகு அவர் பணியில் அல்லாஹ் உதவி செய்கிறான். அதில் பரக்கத்தை வழங்குகிறான். பொறுப்பு, கேட்டு வாங்கப்பட்டால் அந்த வேலை அவருக்கு ஒரு சுமையாகி விடும். உனக்கு இந்த வேலை மிக விருப்பமாக இருந்தது. நீயே உன்னை இதற்கு தகுதியுடையவன் என்று கருதினாய். எனவே, இந்த பதவியின் எல்லா பொறுப்பையும் நீயே ஏற்றுக் கொள். இதில் நான் உனக்கு உதவமாட்டேன் என்று அல்லாஹ் கூறி விடுகின்றான்.

எனவே பதவியை விரும்புவது நஃப்ஸின் ஏமாற்றமாகும். இறைவனுக்கு இது விருப்புடையது அல்ல. இன்றும் கூட ஜமாஅத்தில் தர்பிய்யத்தின் குறையுடைய சில ஜமாஅத்துகளில தர்பிய்யத்தில் குறை உடைய சிலர் பதவியை விரும்புகின்றனர். சில நேரம் அறியமையால் ஜமாஅத்தில் தேர்தலின்போது தமக்குத்தாமே ஓட்டு போடுகின்றார்கள். ஆனால் ஜமாஅத்தின் உறுப்பினர்களுக்கு அல்லாஹ்வின் அருளால் இப்போது ஜமாஅத்தின் சட்டதிட்டங்கள் பற்றி நன்றாக தெரிய வந்துள்ளது.

பதவியை விரும்பாதீர்கள் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறியதன் காரணமாகத்தான் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவில் தமக்குத்தாமே ஓட்டு போடுவது தடுக்கப்பட்டுள்ளது. தமக்குத் தாமே ஓட்டுப் போடுபவர் என்னைத் தவிர இந்த பதவிக்கு யாரும் தகுதியுடையவர் அல்ல. நான்தான் இதற்கு முழு தகுதி உடையவன் என்று தம்மையே கருதுகிறார்.

இவ்வாறு ஜமாஅத்தின் சட்டம் தமக்குத்தாமே ஓட்டுபோட அனுமதிப்பதில்லை என்ற காரணத்தால் அவர்கள் தமது ஓட்டைப் பயன்படுத்துவது கூட இல்லை. தமது ஓட்டைப் பயன்படுத்தாமல் இருப்பதும், நான் தான் இந்த பதவிக்கு மிகவும் தகுதி உடையவன். ஜமாஅத்தின் சட்டத்தின் அடிப்படையில் எனக்கு நானே ஓட்டு போட்டுக் கொள்ள முடியாது. ஆனால் என்னைத் தவிர வேறு யாரும் இந்தப் பதவிக்கு தகுதி உடையவர் அல்ல. எனவே, நான் எனது ஓட்டை பயன்படுத்தவே இல்லை என்று கூறுவதற்கு சமமாகும்.

நமது ஜமாஅத் இவ்வாறான செயல்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். இதற்காக தர்பிய்யத் வழங்குவது மிகவும் அவசியமாகும். உங்களிடம் தொழில் ரீதியாகவோ அல்லது கல்வி ரீதியாகவோ ஏதேனும் தகுதி இருந்தால் அந்த தகுதியை சம்பந்தப்பட்ட பொறுப்பாளருக்கு உதவி செய்வதன் மூலம் வெளிப்படுத்தலாம். பொறுப்பு வகிக்காமலே தொண்டாற்றலாம். இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக தொண்டாற்ற நாடினால் பதவி வகிப்பது ஒரு பொருட்டே அல்ல.

எனவே புதிதாக வருகின்ற இளைஞர்கள் பழைய அஹ்மதிகள் அனைவரும் இவ்விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். பழைய அஹ்மதிகள் கூட நமக்கு தான் அதிக அனுபவம் உள்ளது என்று எண்ணி வரம்பு மீறுகிறார்கள். அவ்வாறான பொறுப்பாளர்கள் சற்று தங்களைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

பொறுப்பாளர்களிடம் குறிப்பாக சுயநலம் இருக்கக் கூடாது. பெயரளவிலான பொதுநலம் அல்ல. மாறாக உண்மையான பொதுநலம் இருக்க வேண்டும். பொறுப்பாளர்கள் எப்போதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கூற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தில பதவி வகிப்பவர் அந்த சமுதாயத்தின் தொண்டர் ஆவார். ஹஸ்ரத் அபூஸர் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பொறுப்பு, பதவி ஒரு அமானத்தாகும். மனிதனோ பலவீனமாவன் ஆவான்.

இந்த அமானத்தை அல்லாஹ் ஒப்படைக்கின்றான். ஆனால் மனிதன் பலவீனமாக உள்ளான். அமானத்திற்குரிய உரிமையை சரியாக நிறைவேற்றவில்லை என்றால், நீங்கள் கேள்வி கேட்கப்படுவீர்கள் என்று அல்லாஹ் கூறுகிறான். எனவே இந்த அமானத்தை நிறைவேற்ற முழு திறமையையும் பயன்படுத்தி இது ஒரு தொண்டு என்று எண்ணி அதை நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் பொறுப்பாளர் சமுதாயத்தின் தொண்டர் ஆவார் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பொறுப்பை நிறைவேற்றும் போது ஒவ்வொரு கணமும் அல்லாஹ்விடம் நேர்வழிக்காகவும், உதவிக்காகவும் துஆ செய்ய வேண்டும். அப்போதுதான் பொறுப்பாளர் தமது பொறுப்பை சரியாக நிறைவேற்ற முடியும்.

என்னை சந்திக்க வரும்போது சிலர் தங்களது பொறுப்பை என்னிடம் கூறுகிறார்கள். அப்போது இளைஞர்களுக்கு பொதுவாக நான் அறிவுரை கூறுகிறேன். அவர்களது பொறுப்பை பற்றிக் கேட்கும் போது என்னிடம் இப்போது இந்தப் பதவி உள்ளது என்று அவர்கள் கூறுகின்றார்கள். இது உங்களது பதவி அல்ல.

நீங்கள் ஆற்றுகின்ற தொண்டாகும் என்று அவர்களுக்கு நான் கூறுகிறேன். தொண்டாற்றுகிறோம் என்ற சிந்தனை இருந்தால்தான் சரியாக தொண்டாற்ற முடியும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்விலிருந்து நான் எடுத்துரைத்த நீதி, நேர்மை, சமத்துவம் ஆகிய போதனைகள் அடங்கிய சம்பவங்கள் அவர்களின் வாழ்நாளில் எல்லா இடங்களிலும் நமக்குத் தென்படுகிறது.

பயணம் செல்கின்றபோது சில நேரம் சவாரிகள் குறைவாக இருக்கும். அப்போது இரண்டு நபர்கள் ஒரு சவாரியில் பயணம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அந்த சூழ்நிலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் தங்களோடு ஒருவரை பகிர்ந்து கொள்வார்கள். அப்போது பிற சஹாபாக்களைப் போன்று தன்னுடன் வருகிற சிறிய வயதுடைய சஹாபியை சவாரியில் அமர்த்தி தாம் சிறிது தூரம் நடந்து வருவார்கள். இவ்வாறு எல்லா வேளையிலும் சமத்துவத்தையும், நீதியையும் போதித்து அதன்படி செயல்பட்டும் வந்தார்கள்.

**லா யஜ்ரி மன்னகும் சினஆனு கவ்மின் அலா அல்லா தாஃதிலூ. இஃதிலூ ஹுவ அக்ரபு லித் தக்வா** – ஒரு சமுதாயத்தின் பகைமை, உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. (5:9)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்வாறு இந்த கட்டளையை தமது வாழ்வில் பேணி வந்தார்கள். இது தொடர்பாக ஒரு உதாரணத்தை உங்களுக்கு நான் எடுத்துரைக்கிறேன்.

யூதர்களின் மிகவும் பிரசித்தி பெற்ற கைபர் நிலம் முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்டவுடன் போரில் கலந்து கொண்ட முஸ்லிம்கள் மத்தியில் அந்த நிலம் பங்கு வைக்கப்பட்டது. அது மிகவும் வளமான நிலமாகும். அங்க பேரீச்சை மரத் தோட்டங்கள் இருந்தன. பேரீச்சையின் விளைச்சல் காலத்தில் அந்த பேரீச்சைகளை பங்கிடும் தருணம் வந்தது. அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுஹைல் (ரலி) அவர்கள் தமது சிறிய தந்தையின் மகனாகிய மஹீஸாவுடன் பேரீச்சையைப் பங்கு வைப்பதற்காக அங்கு சென்றார்கள். அப்போது இருவரும் சற்று விலகிப் பிரிந்து சென்று விட்டனர். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் தனியாக வந்துள்ளார் என்று கருதி அவரை யாரோ கொன்று உடலை ஒரு குழியில் எறிந்து விட்டனர். யூதர்களிடமிருந்து அந்த நிலம் கைப்பற்றப்பட்டிருந்தது. யூதர்களுடன் பகைமை காலமாகவும் போர் சூழலாகவும் இருந்தது. எனவே கொன்றவர்கள் யூதர்களாக இருக்கலாம் என்பது தெளிவாகத் தெரிந்த போதிலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முன் இந்த வழக்கு வந்த போது யூதர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஏனென்றால் முஸ்லிம்கள் யாரும் கொன்றிருக்க வாய்ப்பில்லை. எனினும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மஹீஸாவிடம் இவரை யூதர்கள் தான் கொன்றார்கள் என்று உம்மால் சத்தியம் செய்து கூற முடியுமா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் நான் என் கண்களால் பார்க்கவில்லை. எனவே சத்தியம் செய்ய முடியாது என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் யூதர்களிடம், இவரைக் கொன்றீர்களா? என்று சத்தியம் வாங்க வேண்டும். கொலை செய்யவில்லை என்று சத்தியம் செய்வதல்ல. மாறாக, கொலை செய்யவில்லை என்பதற்கான ஆதாரம் வழங்க வேண்டும். அப்போது மஹீஸா, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் யூதர்களை எவ்வாறு நம்புவது? இவர்கள் 100 முறை வேண்டுமானால் பொய் சத்தியம் செய்து விடுவார்கள் என்று கூறினார். ஆனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீதியை நிலைநாட்டியவாறு யூதர்களின் சத்தியத்தை ஏற்றுக் கொண்டார்கள். யூதர்களை குறை கூறவோ, தண்டிக்கவோ இல்லை. அப்துல்லாஹ்வின் இரத்த இழப்பீட்டுத் தொகையை பைத்துல் மாலில் இருந்து வழங்கினார்கள்.

ஆக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய உயர்ந்த முன்மாதிரி இதுவே ஆகும். வாழ்க்கையின் எந்தவொரு அங்கத்திலும் நீதியை அவர்கள் கைவிடவில்லை. அவர்களின் வாழ்வின் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும் அதில் நமக்கு முன்மாதிரி இருப்பதை நாம் பார்க்கின்றோம்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய நீதியின் முன்மாதிரியை நான் உங்கள் முன் எடுத்துக்காட்டாக கூறினேன். ஆனால் இன்றைய காலகட்டத்தில் பெரிய பெரிய ஜிப்பாக்களை அணிந்த மவ்லவிகள் மீலாதுந்நபி மாநாடுகள் நடத்துகின்றனர். அந்த மாநாட்டில் அஹ்மதிகளை ஏசுவதைத் தவிர ஒன்றுமே இருப்பதில்லை. கத்மே நுபுவ்வத் – இறுதி நபித்துவம் தொடர்பாக பெரிய பெரிய சொற்பொழிவுகள் நடத்துகின்றனர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களை ஏசிப் பேசுகிறபோது அவர்களின் சொற்பொழிவுகள் ஆட்டம் காண்கிறது.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுக்கு எந்த அளவு உயர்ந்த தர்பிய்யத் வழங்கினார்கள் என்று பாருங்கள்! அப்துல்லாஹ்வின் கொலை வழக்கில் சந்தர்ப்ப சூழ்நிலைகள் யாவும் யூதர்களுக்கு எதிராக இருந்தது. ஆனால் நேரில் காணாததால் சத்தியம் செய்யவில்லை.

ஆனால் இன்ற தங்களை இஸ்லாமிய மவ்லவிகள் என்று கூறிக் கொள்ளும் நபர்கள் பொய் சத்தியங்கள் செய்து அஹ்மதிகளுக்கு எதிராக பொய் வழக்கு போடுகிறார்கள். காவல் நிலையங்களுக்குச் சென்று F.I.R பதிவு செய்கிறார்கள். மிகவும் பொய்யான கீழ்த்தரமான குற்றச்சாட்டுகளை அஹ்மதிகளின் மீது சுமத்துகின்றனர். இவ்வாறு பொய்யான F.I.R பதிவு செய்து அதற்கு சாட்சியும் அளிக்கிறார்கள். இறைவனுக்கு சற்றும் அஞ்சுவதில்லை.

இவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றுபவர்கள் என்றால் நிச்சயமாக அச்சம் இருக்கும்.

மஹீஸா (ரலி) அவர்கள் யூதர்களைப் பற்றி இவர்களுக்கு என்ன 100 பொய் சத்தியங்கள் கூட செய்வார்கள் என்று கூறினார். இன்று இது யாருக்குப் பொருந்துகிறது என்று பாருங்கள்!

இந்த பெயர்தாங்கி உலமாக்களின் கைகளில் பொம்மைகளாக அகப்பட்டுள்ள பொதுமக்களின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. இந்த பொதுமக்கள் மவ்லவிகளின் தீய தூண்டுதலின்கீழ் வந்துள்ளனர். இதன் காரணமாகவே பல வீடுகள் நிம்மதியிழக்கின்றன என்பது இவர்களுக்கு புரியவில்லை.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமைக் கொல்லக் கூடாது என்று அல்லாஹ் மிகவும் வன்மையாகத் தடுத்துள்ளான். இந்த உலகிலும், மறு உலகிலும் இதற்கு தண்டனை உண்டு. ஒரு ஆட்டை வெட்டுவதை விட இன்று மனிதர்களைக் கொல்வது மிகவும் மலிவாகி விட்டது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் விதாவின் போது, நீங்கள் இந்த நாளுக்கும் இந்த மாதத்திற்கும் எவ்வளவு கண்ணியம் வழங்குகிறீர்களோ அவ்வாறே ஒரு முஸ்லிமின் உயிரும் உடைமையும் மற்ற முஸ்லிமுக்கு கண்ணியமானதாகும். இவ்வாறு உயிரையும் உடைமையையும் பாதுகாப்பது மற்ற முஸ்லிமின் கடமையாகக் கூறினார்கள். ஆனால் இன்று உலகில் என்ன நடக்கிறது? பாகிஸ்தானில் ஒருவர் மற்றவரைக் கொள்ளை அடிக்கிறார். அஹ்மதிகள் இறைவனின் பெயரால் (உள்ளங்களைக்) கொள்ளை அடிக்கின்றனர்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கலிமா ஓதுகின்ற ஒவ்வொருவரும் முஸ்லிம் ஆவார்.

முஸ்லிம்களின் இந்த நிலையின் மீது அல்லாஹ் கருணை காட்டுவானாக. **ரஹ்மத்துல் லில் ஆலமீன்** (ஸல்) அவர்களின் உண்மையான முன்மாதிரியின் மீது வழிநடக்க அல்லாஹ் இவர்களுக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. அல்லாஹ் அவர்களது முன்மாதிரியின் மீது வழிநடந்தவாறு நமது வாழ்க்கையையும் அதன் மீது அமைத்துக் கொள்ளும் நல்வாய்ப்பை நமக்கும் வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 13.03.2009**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**